**தலைப்பு 205 – பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 யூன் 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 நவம்பர் 12 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை

தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் விடுக்கப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| அவதானிப்புக்கள் | | | |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| (அ) 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 18/2001 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | 5 ஆண்டுகள் ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றியுள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் ஏனைய சேவை நிலையங்களில் சேவையாற்றுவதற்கு இடமளிப்பதற்காக இடமாற்றம் வழங்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தில் 5 ஆண்டுகளை மிகைத்த உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிய உத்தியோகத்தர் களை இடமாற்றம் வேண்டுதல் விடுக்கப்பட்டிருந்து ம் அவர்களுக்கு இடமாற்றம் கிடைத்திருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 2018/02 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை | பதவியணியிலுள்ள அனைத்து நபர்கள் தொடர்பாகவும் காணப்படுகின்ற மற்றும் காணப்பட வேண்டிய திறன்களுக்கு மத்தியிலான வித்தியாசத்தை தீர்த்து வைப்பதற்காக எந்த வகையிலான மனிதவள அபிவிருத்தி இடம்பெற வேண்டும் என ஆய்வு செய்து அனைத்து அங்கத்தவர்களுக்காகவும் ஒரு ஆண்டிற்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலத்திற்கு குறையாத பயிற்சி வாய்ப்பினை வழங்கும் வகையில் திணைக்களத்திற்கு விசேடத்துவமான மனித வளங்கள் அபிவிருத்தி திட்டத்தினை தயாரிக்க வேண்டியதுடன் ஒட்டுமொத்த பதவியணிக்காகவும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடப்படுதல் வேண்டும். எனினும், திணைக்களத்தினால் அவ்வாறு செய்யப்பட்டிருக்க வில்லை. மேலும், திணைக்களத்தின் பதவியணியிலுள்ள 59 அங்கத்தவர்களுக்கு மீளாய்வாண்டின் போது பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்காக ஒரு திட்டம் தயாரிக்கப் பட்டிருந்தும் செயலாற்றல் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டி ருக்கவில்லை. பெற்றுக் கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளானது சேவை அத்தியாவசியம் மற்றும் முன்னுரிமையைக் கருத்திற் கொண்டு பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| (இ) | 2018 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | நீதி அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள வாகனத்தின் உரிமையைத் தீர்த்து வைப்பதற்கு 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்துகின்ற வாகனங்களின் பதிவு செய்த உரிமையை தீர்த்து வைத்தல் வேண்டும். | உரிமையை ஒப்படைக்கும் விண்ணப்ப பத்திரங்களை வழங்குமாறு நீதி அமைச்சுக்கு ஒரு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது 4 மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் 2 மூலதன செலவு விடயங்களுக்காக தேவைப்படுகின்ற நிதிஏற்பாடு முழுவதும் வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை மொத்த நிதிஏற்பாட்டில் ரூபா 5,653,330 அல்லது 15 சதவீதத்திலிருந்து 56 சதவீதம் வரையான வீச்சுடைய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | ஆண்டிற்கான தேவைப் பாட்டினை முறையாக முன்னறிந்து நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் சிறந்த மட்டத்தில் பயன்படுத்துதல் வேண்டும். | பிரதி பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் பதவிக்கான எரிபொருள் மற்றும் போக்குவரத்துப் படிகள் அங்கீகரிக்கப்படாமை, நம்பிக்கைப் பொறுப்பு / மரணக் கொடை ஆதனங்களுக்குரிய வழக்கறிஞர் கட்டணத்தை உரிய நம்பிக்கைப் பொறுப்பு மரணக் கொடை ஆதனங்களிலிருந்து மேற்கொள்ளுதல் முதலிய விடயங்களின் காரணமாக இச்சேமிப்பு ஏற்பட்டுள்ளது. |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான பொறுப்புக்களின் பெறுமதி பொறுப்புக்கள் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 323,735 ஆக இருந்தும் நிதிக் கூற்றுக்களுக்கு இணங்க அது ரூபா 295,842 ஆக இருந்ததனால் ரூபா 27,893 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிட்ட பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் திறைசேரி பதிவேட்டுடன் இணங்கியிருத்தல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் திகதி வரை உரிய விலைப்பட்டியல்கள் கணக்குகள் பிரிவிற்கு கிடைத்திருக்காததனால் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த முடியாதிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) பல்வேறு மரணக் கொடை ஆதனங்களின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள 10 தோட்ட ஆதனங்கள் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரினால் முகாமைத்துவம் செய்யப்படுவதுடன் அவற்றின் வருமானத் திலிருந்து மரணக் கொடையாளரின் குறிக்கோளை நிறைவேற்று வதற்கு எதிர்பார்க்கப் பட்டிருந்தது. கடந்த நான்கு ஆண்டுகளின் போது தோட்டங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானங்கள் தொடர்பாக பரீட்சித்த போது 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 3,744,310, ரூபா 9,336,629 மற்றும் ரூபா 3,984,175 தொகைகளான இலாபங்களும் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 6,222,482 நட்டமும் அடைந்து கொள்ளப் பட்டிருந்தது. இத் தோட்டங்களின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் உரிய மரணக் கொடை ஆதன உரிமையாளர்களின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | மீள் பயிரிடல் திட்டங்களைத் தயாரித்தல், பயிர் பல்லினப்படுத்தல் இயலுமையினைப் பரீட்சித்தல், மீள் பயிர்ச் செய்கைக்காக நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ளும் இயலுமையினைப் பரீட்சித்தல், தோட்டங்கள் சம்பந்தமான மேற்பார்வை செய்தல் நடவடிக்கைகளை முறைமைப் படுத்துதல் என்பன செய்யப்படுதல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஹெரி ஹப்புகொட மரணக் கொடைக்குரிய காலி நியாகம பிரதேசத்தில் அமைந்துள்ள 17 ஏக்கர் மொத்த பரப்பளவான மத்தக தோட்டம் என்ற பெயருள்ள காணியில் A இலிருந்து E வரை 5 பகுதிகளாக பிரித்து ஒதுக்கீடு செய்யப்பட்ட 15 ஏக்கர் 2 ரூட் 38 பேர்ச்சர்ஸ் அளவானவற்றில் A, D மற்றும் E பகுதிகளின் சில அளவானவற்றில் தேயிலை பயிரிடப்பட்டிருந்ததுடன் B மற்றும் C பகுதிகள் முழுமையாக காடாகியிருந்தன. எனவே தோட்ட ஆதனங்கள் முறையாக முகாமைத்துவம் செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | பயிரிடப்படாத காணிகளில் பயிரிடுவதற்காக அரசாங்கத்தின் நிவாரணத்தை பெற்றுக் கொள்ளும் இயலுமையினைப் பரீட்சித்தல், காடு பற்றியுள்ள காணிகளை துப்புரவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் மற்றும் தோட்டங்கள் சம்பந்தமான மேற்பார்வை நடவடிக்கைகளை முறைமைப் படுத்துதல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் மத்தக தோட்டத்தின் துறை இலக்கம் B பகுதியின் 2 ½ ஏக்கர்களில் புதிதாக தேயிலை பயிர்ச் செய்கையை ஆரம்பிப்பதற்கான செலவுகள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் கடந்த ஆண்டில் காணப்பட்ட பாதகமான நிதி நிலைமையின் அடிப்படையில் அதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. |
| (இ) | 17 ஏக்கர்கள் அளவான முழுமையான காணியான மேலே (ஆ) பந்தியில் குறிப்பிட் காணியில் மிகுதியான 1 ஏக்கர், 1 ரூட், 2 பேர்ச்சர்ஸ் காணியை உறுதியாக இனங்கண்டு பாதுகாப்பு எல்லையினை நிறுவி பாதுகாப்பு வேலியினை நிர்மாணித்து விவசாய நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அக்காணியை உறுதியாக இனங்கண்டு அளவீட்டினை மேற்கொண்டு, பாதுகாப்பு வேலியினை நிர்மாணித்து பொருத்தமான விவசாயப் பயிர்ச் செய்கைக்காக ஈடுபடுத்துதல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்பட வில்லை. |
| (ஈ) | மேலே (ஆ) பந்தியில் குறிப்பிட்ட தோட்டத்தின் தோட்ட விடுதி உடைந்த நிலையில் காணப்படுகின்றது எனவும் பராமரிப்பு நடவடிக்கை பலவீனமான மட்டத்தில் காணப்படுகின்றது எனவும் பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. இத்தோட்டத்திற்காக தோட்ட காவல்காரர் ஒருவர் சேவையில் ஈடுபட்டிருக்காததுடன் நாளாந்த | தோட்ட விடுதிக்கு தேவையான திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் மற்றும் தோட்டம் சம்பந்தமான மேற்பார்வை நடவடிக்கைகளை முறைமைப் படுத்துதல் வேண்டும். | தோட்ட விடுதியில் மின்சார முறைமையினைத் திருத்தம் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளது. நிகழ்காலத்தில் நிருவாக சபை தீர்மானத்தின் அடிப்படையில் தேயிலைத் தொழிலில் சேவையில் ஈடுபட்டுள்ள நாளாந்தம் தோட்ட வேலையாளருக்கு செலுத்த வேண்டிய சம்பளம் ரூபா 640 ஆக இருந்த |

| | | | |
|---|---|---|---|
| | பொலிஸ் காவல் பயணச் சேவையும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. நாளாந்த சம்பள அளவு போதாமையின் காரணமாக கொழுந்து பறிப்பவர்களின் வருகை மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது என வருகைப் பதிவேட்டிலிருந்து உறுதிப்படுத்தப்பட்டதுடன் இந்த நிருவாக பலவீனம் தொடர்பாக கவனித்துப் பார்க்கையில் இந்த 17 ஏக்கர்கள் அளவிலான காணியை ஆக்கபூர்வமான வகையில் முகாமைத்துவம் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | போதிலும், பிரதேசத்தில் வேலையாட்களின் சேவையைப் பெற்றுக் கொள்வதிலுள்ள சிக்கலின் அடிப்படையில் ஆண் வேலையாளுக்கு ரூபா 1,043 ஆகவும் பெண் வேலையாளுக்கு ரூபா 743 ஆகவும் சம்பளம் செலுத்தப்பட்டது. |
| (உ) | ஹெரி ஹப்புகொட மரணக் கொடை ஆதனத்தின் சுதுவெலிபொத தோட்டத்தில் அன்குடுதுவ எனும் பெயருள்ள காணித் துண்டில் 13.5 ஏக்கர் அளவான இறப்பர் பயிரிடப்பட்ட காணியில் சில இறப்பர் மரங்களிலிருந்து மாத்திரம் இறப்பர் பால் வெட்டப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. பல மரங்கள் அகற்றப்பட்டு மீண்டும் நாற்றுக்காக பயிரிடப்பட வேண்டிய மட்டத்தில் காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது. அனுமதியற்ற நிர்மாணங்கள் சிலவும் இத்தோட்டத்தில் காணப்படுகின்றமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் அது சம்பந்தமாக திணைக்களத்தினால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீண்டும் பயிரிடுவதற்காக அரசாங்கத்திடம் நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளும் இயலுமையினை கவனித்துப் பார்த்தல் மற்றும் அனுமதியற்ற நிர்மாணங்கள் காணப்படும் தோட்டங்களில் நில அளவை நடவடிக்கைகளை மேற்கொண்டு அனுமதியற்ற நிர்மாணங்கள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்பட வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மேலே (உ) பந்தியில் குறிப்பிட்ட தோட்டத்தில் அமைந்துள்ள தோட்ட பங்களாவின் கூரையில் பராளை மற்றும் யன்னல் நிலைகள் உக்கியிருந்ததுடன் கூரையின் சில பகுதிகள் கிடுகுகளினால் மூடப்பட்டிருந்தது. அந்த பங்களாவில் தோட்ட அத்தியட்சகரும் வெளிக்கள உத்தியோகத்தரும் குடியிருக்கின்ற போதும் பழுதடைந்த நிலைமையின் காரணமாக குடியிருப்பதற்கு பொருத்தமான நிலையில் இல்லை எனவும் விரைவாக திருத்தம் செய்தல் அவசியம் என்பதுவும் அவதானிக்கப்பட்டது. | தோட்ட பங்களாவிற்கு தேவையான திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுதல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்பட வில்லை. |
| (எ) | என்.டீ.எஸ் சில்வா விஜேசிங்ஹ மரணக் கொடை ஆதனத்தின் களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள ரிச்மன்ட் இல்லத்தின் கூரைகள் உடைந்துள்ளதன் காரணமாக பல இடங்கள் அழிவுற்ற நிலையிலும் படிக்கட்டுக்கள் மற்றும் இல்லத்தின் விருந்தோம்பல் அறை பாதுகாப்பற்றதாகவும் இந்த இல்லத்தில் அமைந்துள்ள சிறுவர் இல்லத்தினதும் மாணவர் விடுதியினதும் சுவர்கள் வெடித்து உடைந்த நிலையில் காணப்பட்டது என்பதுவும் அவதானிக்கப்பட்டது. 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட ஆதிகால முக்கியத்துவமான இந்த இல்லத்தை பேணிப் பாதுகாக்கும் தேவைப்பாடு காணப்பட்டிருந்தும் இல்லத்திற்காக கடந்த 10 ஆண்டுகள் காலத்தில் எதுவித திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இல்லத்தை பேணிப் பாதுகாப்பதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இல்லத்தினை பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைக்காக 2018 ஆம் ஆண்டின் போது மொறட்டுவை பல்கலைக் கழகத்தின் ஒரு பேராசிரியருக்கும் அமைச்சின் செயலாளருக்கு மிடையே கலந்துரையாடல் நடைபெற்றிருந்தும் இல்லத்தினைப் பேணிப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்துவதற்கு போதியளவு பணம் இல்லாததனால் அந்த நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டி ஏற்பட்டது. அதுவரை பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக நடைமுறையில் செய்யக்கூடிய அனைத்து செயற்பாடுகளும் உச்ச அளவில் நிறைவேற்றப்படுகின்றது. விடுதியை நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்காக மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | மேலே (எ) பந்தியில் குறிப்பிட்ட மரணக் கொடை ஆதனக்காரரின் இறுதி விருப்பு பத்திரத்தில் ஆதிகால பெறுமதியைக் கொண்ட தொல் பொருட்கள் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அந்த தொல்பொருட்கள் மேற்குறிப்பிட்ட இல்லத்தில் வைக்கப்பட்டு பேணிப் பாதுகாக்கப்பட வேண்டு மெனவும் குறிப்பிடப் பட்டிருந்தது. எனினும் அந்த தொல் பொருட்களுக்கு மத்தியில் சில தொல்பொருட்கள் மாத்திரம் திணைக்களத்தின் பெட்டகத்தில் வைக்கப் பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் ஏனைய தொல் பொருட்கள் காணப்பட்ட இடங்கள் தொடர்பாக திணைக்களத்திடம் அறிக்கை காணப்படவில்லை. | தொல் பொருட்களை பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த மரணக் கொடை ஆதனத்திலுள்ள பொருட்களின் தகவல்கள் திணைக்களத்திலுள்ள பெட்டகத்தில் மீண்டும் மீளாய்வு செய்து பெற்றுக் கொள்வதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் பின்னர் பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கை நம்பிக்கைப் பொறுப்பாளரின் அங்கீகாரத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படும். |
| (ஐ) | ஐ.டபிள்யூ.சீ. விஜேரத்ன மரணக் கொடை ஆதனத்தின் நோர்ட்டன் பிரிஜ்ஜில் அமைந்துள்ள வீடும் காணியும் 1993 திசெம்பர் 07 ஆந் திகதி முதியோர் இல்லமாகப் பேணுவதற்காக கினிஹத்ஹேன பிரதேச செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும், மரணக்கொடை ஆதனத்தின் நிரந்தர ஆதனங்களை ஏனைய தரப்பினர்களுக்கு வழங்கும் போது வீட்டை ஒப்படைத்தல், பராமரித்தல் முதலிய விடயங்கள் தொடர்பாக முறைப்படியான இணக்கப்பாட்டினை ஏற்படுத்திக் கொள்வதற்காக உடன்படிக்கை செய்து கொள்ளப்பட வேண்டிய போதிலும். 2019 திசெம்பர் 10 ஆந் திகதி வரை 26 ஆண்டுகள் கடந்திருந்தும் முறைப்படியாக உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருக்கவில்லை | வெளித் தரப்பினர்களுக்கு மரணக் கொடை ஆதனங்களை குத்தகை அடிப்படையில் வழங்கும் போது முறையான குத்தகை உடன்படிக்கை செய்து கொள்ளப்படுதல் வேண்டும். | கருத்துரைகள் தரப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | சீ.ஈ.வனிகசூரிய மரணக்கொடை ஆதனத்திலுள்ள ஆதனங்களை விற்று மரணக்கொடை ஆதனக்காரரின் பெயரில் ஒரு நம்பிக்கைப் பொறுப்பினைத் தோற்றுவிப்பதற்காக பொது நம்பிக்கைப் பொறுப்பிற்கு 2005 நவம்பர் 10 ஆந் திகதி நிருவகிக்கும் அதிகாரம் கிடைத்திருந்தது. எனினும், 2019 திசெம்பர் வரை 14 ஆண்டுகள் காலம் கடந்திருந்தும் இறுதி விருப்பு பத்திரத்தின் பிரகாரம் 7 பிரதேசங்களில் அமைந்துள்ள காணிகள் மற்றும் கட்டிடங்களை இனங்கண்டு பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் பாதுகாப்பதற்கும் அந்த ஆதனங்களை விற்று மரணக்கொடை ஆதனக்காரரின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய காணிகள் மற்றும் கட்டிடங்களை இனங்கண்டு பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் உரிமையை உறுதிப்படுத்தி மரணக்கொடை ஆதனக்காரரின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஓ) | 2019 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2020 யூலை 16 ஆந் திகதி கணக்காய்விற்கு கிடைத்திருந்த போதிலும் திணைக்களத்தினால் நிருவகிக்கப்படுகின்ற தோட்டங்களுக்குரிய பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | திணைக் களத்திற்குச் சொந்தமான அனைத்து சொத்துக்களுக்கு மான வருடாந்த பொருள் மெய்மை யாய்வினை மேற்கொண்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துக்களை உறுதிப்படுத்துதல் வேண்டும். | திணைக்களத்தினால் நிருவகிக்கப்படுகின்ற சொத்துக்களுக்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை என்பதனை ஏற்றுக் கொள்வதுடன் எதிர்காலத்தில் அதற்காக நடவடிக்கை எடுப்பேன். |

**3.2 முகாமைத்துவ பலவீனம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | டீ.எஸ்.டபிள்யூ சமரகோன் மரணக்கொடை ஆதனத்திற்குச் சொந்தமான சயிமன் டேல்வத்த காணியில் 16 ஏக்கர் 01 ரூட் 35 பேர்ச்சர்ஸ் 1982 ஆகஸ்ட் 27 ஆந் திகதி அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டிருந்த துடன் அதற்காக மீளாய்வாண்டின் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 4.69 மில்லியன் இழப்பீடும் வட்டியும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், இக்காணிக்காக தீர்மானிக்கப்பட்ட இழப்பீட்டுப் பணம் ரூபா 2.63 மில்லியன் என 2013 சனவரி 16 ஆந் திகதி கெஸ்பேவ பிரதேச செயலகத்தால் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் 2014 நவம்பர் 20 ஆந் திகதி அந்த இழப்பீட்டுப் பணம் ரூபா 1.79 மில்லியன் என தெரிவிக்கப்பட்டிருந்தது. பொறுப்பேற்கும் உத்தியோகத்தரினால் தெரியப்படுத்தப்பட்ட இழப்பீடு சம்பந்தப்பட்ட தீர்மானம் தொடர்பாக திருப்தி கொள்ளவில்லையாயின் அத்தீர்மானம் கிடைத்து 21 நாட்களுக்குள் இழப்பீட்டு மீளாய்வு சபைக்கு மேன்முறையீடு செய்யக் கூடியதாகக் | அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்ட மரணக் கொடை காணிகளுக்குரிய இழப்பீட்டுப் பணமும் வட்டிப் பணமும் மரணக் கொடைக்கு கிடைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கிடைக்க வேண்டிய இழப்பீட்டுப் பணத்தையும் வட்டியையும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மதிப்பீட்டு அறிக்கைகளின் வித்தியாசம் சம்பந்தமாக பிரதான மதிப்பீட்டாளரிடம் விசாரிக்கப்பட்டுள்ளது. குறைவடைந்துள்ள காணியின் அளவு சம்பந்தமாக கொழும்பு பிரிவின் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரிடமிருந்து விடயங்கள் விசாரிக்கப்பட்டுள்ளது. இரண்டு இழப்பீட்டுப் பணங்களுக்கிடையிலான வித்தியாசம் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது 2019 ஆகஸ்ட் 21 ஆந் திகதி கெஸ்பேவ பிரதேச செயலகத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டிருந்தும் திணைக்களத்தினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் இழக்கப்பட்ட இழப்பீட்டுப் பணம் சம்பந்தமான சிக்கல் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 1968 ஆகஸ்ட் 11 ஆந் திகதி சிங்கப்பூரில் மரணமடைந்த புளோரன்ஸ் ஈனிட் விதம் அவர்களின் இலங்கையில் காணப்பட்ட அசையாத மற்றும் அசையும் ஆதனங்களை விற்பனை செய்து கிடைக்கும் பணத்தை உரித்துடையவர்களுக்கு / நலனாளிகளுக்கு வழங்குவதற்காக அடோர்னி தத்துவக்காரராக 1975 ஆம் ஆண்டின் போது இலங்கை பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தார். கொழும்பு 05 ஹெவ்லொக் வீதி, 19 ஆம் இலக்க இடத்தில் அமைந்துள்ள 1 ரூட் 3.13 பேர்ச்சஸ் சதுர அளவினைக் கொண்ட காணியும் கட்டிடமும் விற்கப்பட்ட பணத்திலிருந்து ரூபா 64,645,776 தொகை உரித்துடையவர்கள் / நலனாளிகளுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 35,880,064 பணம் 30 உரித்தாளர்கள் / நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் 16 நலனாளிகளுக்கு ரூபா 28,765,712 தொகை செலுத்த வேண்டியிருந்த போதிலும், ஆதனங்களை விற்று 8 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் | நலனாளிகளுக்கு பணத்தை செலுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும் மற்றும் பணம் செலுத்தப்படும் வரை நிதியை விளைதிறனான வகையில் முதலீடு செய்தல் வேண்டும். | இப்பணத்தை வழங்கும் போது நலனாளிகளின் வேண்டுதலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டது. நலனாளிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக உள்ள பணம் 2019 ஆம் ஆண்டின் போது முதலீடு செய்யப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | கடந்திருந்தும் அதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஆதனங்களை விற்பனை செய்ததிலிருந்து கிடைத்த பணமும் அதற்கு கூட்டுச் சேருகின்ற வட்டியும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென நீதிமன்றத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் ரூபா 24,531,570 தொகையை 16 நலனாளிகளுக்கிடையே 2010 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பகிர்ந்தளிக்கும் போது அப்பணத்தை விடுவிக்கும் வரை வினைத்திறனான முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்தாமையின் காரணமாக நலனாளிகளுக்கு கிடைக்க வேண்டியருந்த வட்டிப் பணம் இழக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | ஆர்.எல்.எச்.சந்திரசேகர எனும் நபரின் அனுராதபுரம் மாவட்டத்தில் பொதானேகமவில் அமைந்துள்ள 18 ஏக்கர் 03 ரூட் 01 பேர்ச்சர்ஸ் மற்றும் 17 ஏக்கர் 02 ரூட் 23 பேர்ச்சஸ் அளவான காணிகளுக்காக பொது நம்பிக்கைப் பொறுப்பாளரினால் 2000 யூலை 04 ஆந் திகதி தற்காலிக குத்தகைதாரர் நியமிக்கப்பட்டிருந்தார். எனினும், அதற்காக முறைப்படியான குத்தகை உடன்படிக்கையினைச் செய்து கொள்வதற்கு 2020 சனவரி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. உறுதியாக குத்தகை விவசாயிகளினால் செய்கை பண்ணப்பட்ட வயல் காணிகளின் ஏக்கர் அளவு | வெளித்தரப்பினர் களுக்கு மரணக் கொடை ஆதனங்களை குத்தகை அடிப்படையில் வழங்கும் போது ஆதனங்களின் பாதுகாப்பினையும் அவற்றிலிருந்து நியாயமான வருமானம் பெற்றுக் கொள்ளப் படுவதனையும் உறுதிப்படுத்து வதற்கான முறையான குத்தகை உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் குத்தகை செலுத்த தவறிய | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | எவ்வளவு, உரிய போகத்தில் நெல்லுக்கான உத்தரவாத விலை என்ன, தென்னங் காணியில் பயிரிடப்பட்ட அளவும் விளைச்சலும் எவ்வளவு, அதற்கிணங்க வழமையான பெறுவனவு சரியானதா என்பவை சம்பந்தமாக பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தினால் எச்சந்தர்ப்பத்திலும் மேற்பார்வையோ அல்லது பின்தொடர் நடவடிக்கையோ செய்யப்பட்டிருக்கவில்லை. குத்தகை விவசாயிகளினால் அவர்களின் விருப்பின் பிரகாரம் செலுத்தப்பட்ட வழமையான தொகை மாத்திரம் பொறுப்பேற்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2000 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை 36 ஏக்கர் 01 ரூட் 24 பேர்ச்சர்ஸிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் ரூபா 3,575,542 மாத்திரமாகும். | ஆதனங்களை மீளப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |
| (ஈ) | மேலே (இ) பந்தியில் குறிப்பிடப்பட்ட மரணக்கொடை ஆதனத்திற்குச் சொந்தமான அனுராதபுரம் பழைய நகரத்தில் குருணாகல் வீதியிலுள்ள 238 மற்றும் 239 ஆம் இலக்க வியாபார கட்டிடங்களும் காணியும் முறையான உடன்படிக்கை செய்து கொள்ளப்படாது குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2000 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்திலிருந்து | - மேற்படி - | கருத்துரைகள் தரப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | குத்தகைதாரர் குத்தகைப் பணத்தைச் செலுத்த தவறியிருந்ததுடன் அதன் பின்னர் அந்த ஆதனங்களை முகாமைத்துவம் செய்தல் சம்பந்தமாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை | | |
| (உ) | வீரசிங்ஹ அபேநாயக்க மரணக் கொடை ஆதனத்தின் மாத்தறை களஞ்சிய வீதியிலுள்ள 32 பேர்ச்சஸ் பரப்பளவுள்ள காணியும் கட்டிடமும் 2013 ஆம் ஆண்டு வரை ஆக்கபூர்வமான வகையில் முகாமைத்துவம் செய்யப்பட்ருக்காததுடன் 2013 பெப்ரவரி 05 ஆந் திகதி ரூபா 8,000 மாதாந்த வாடகைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. மேற்கூறிய குத்தகை உடன்படிக்கை 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்திருந்தது. இந்த ஆதனங்களை விற்பனை செய்வதற்காக 97/16 ஆம் இலக்க வழக்கின் கீழ் 2016 செப்தெம்பர் 29 ஆந் திகதி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதியின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தும் ஆதனங்களை விற்று நிதியத்திற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக முறையான குத்தகை உடன்படிக்கை செய்து கொள்ளப்படாது மேற்கூறிய குத்தகைதாரருக்கே மாதம் ரூபா 10,000 பணத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | விற்பனை செய்வதற்காக நீதிமன்ற அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்ட காணியையும் கட்டிடங்களையும் விற்பனை செய்து மரணக் கொடையின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | டி.ஜே.டி.ஜே.அபேசேகர மரணக் கொடை ஆதனத்திற்குச் சொந்தமான காலி, எல்பிடிய பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு கடையும் காணியும் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக உடன்படிக்கை செய்து கொள்ளப்படாது குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 1,100,000 மற்றும் ரூபா 2,300,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்ட இக்கடையும் காணியும் தற்பொழுது பயன்படுத்தி வருகின்ற குத்தகைதாரரினால் மதிப்பீட்டுப் பெறுமதிக்கு கொள்வனவு செய்வதற்கு இணங்குவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தும் அதற்காக எழுத்து மூலம் இணக்கப்பாடு தெரிவித்திருக்கவில்லை. மேலும், கடைக்காக 2018 மே மாதம் வரை ரூபா 227,380 தொகையும் காணிக்காக 2005 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை ரூபா 143,400 தொகையுமாக குத்தகை வாடகை அறவிடப்பட வேண்டுமென கணிப்பீடு செய்யப்பட்டிருந்தும் அப்பணத்தையும் உள்ளடக்கி 2019 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டிய குத்தகை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | வெளித் தரப்பினர்களுக்கு மரணக் கொடை ஆதனங்களை குத்தகை அடிப்படையில் வழங்கும் போது ஆதனங்களின் பாதுகாப்பினையும் அவற்றிலிருந்து நியாயமான வருமானத்தை பெற்றுக் கொள்வதனையும் உறுதிப்படுத்து வதற்காக முறையான குத்தகை உடன்படிக்கை யினை செய்து கொள்ள வேண்டியிருத்தல் மற்றும் குத்தகை செலுத்த தவறியுள்ள ஆதனங்களை மீளப் பெற்றுக் கொள்வதற்காக தேவையான சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |
| (எ) | நுகேகொடை பிரதேசத்தில் வசித்து வந்த ஜீ.எஸ்.ஜயசூரிய எனும் பெயருள்ள நபரின் மரணக் கொடை ஆதனம் சம்பந்தமாக நிருவகிக்கும் | திணைக்களத்திற்கு சட்டரீதியான உரிமையுள்ள ஆதனங்கள் சம்பந்தமாக மாத்திரம் வழக்கு | திணைக்களத்தினால் இழப்பீட்டிற்காக வேண்டிக் கொள்ளப்பட்ட இழப்பீட்டு பரீட்சிப்பிற்காக அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் மொறட்டுவ பிரதேச |

அதிகாரம் 1982 ஆம் ஆண்டின் போது பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு கிடைத்திருந்தது. மரணக் கொடைதாரரின் மரணமடைந்த முதலாவது மனைவிக்குச் சொந்தமான ஒரு காணி 1999 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தினால் இறுதிவிருப்பு பத்திரத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளின் பிரகாரம் அக்காணிக்காக மரணக் கொடைதாரருக்கு தகைமை இல்லாதிருந்தும் இழப்பீட்டு தகமையை வேண்டி 2000 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை வழக்கறிஞர் கட்டணமாக ரூபா 2,962,430 செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும், 2019 ஒக்தோபர் 23 ஆந் திகதி வழங்கப்பட்ட 522/00/விசேடம் ஆம் இலக்க வழக்கின் கட்டளையின் பிரகாரம் மேற்கூறிய ஆதனம் தொடர்பாக இழப்பீட்டுத் தகைமை இல்லை என தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது. எனவே தகைமையற்ற ஆதனத்திற்காக தேவையற்ற வகையில் காலமும் பணமும் செலவு செய்யப்பட்டதன் காரணமாக அறக்கொடை, மருத்துவ உதவி புலமைப் பரிசில் வழங்குதல் முதலிய மரணக் கொடைதாரரின் குறிக்கோள்கள் 2010 ஆம் ஆண்டிலிருந்து நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

நடவடிக்கைகளில் தொடர்பு கொள்ள வேண்டும்.

செயலகத்தினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் பிரதிவாதியாக பெயரிடப்பட்டிருந்தார். அதற்கிணங்க தொழில்சார் கட்டணம் செலுத்தப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | ஹெரி ஹபுகொட அவர்களின் இறுதி விருப்பு பத்திரத்தின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டிலும் மரணக் கொடை ஆதனத்தின் வருமானத்தில் 1/5 பங்கினை சேமிக்க வேண்டுமெனவும் அச்சேமிப்பு ரூபா 100,000 ஆக இருக்கையில் புலமைப்பரிசில் வழங்குவதற்கும் இடர் நிலைமையின் போது நிவாரணங்கள் வழங்குவதற்கும் சேகரித்து வைத்திருக்க வேண்டும் எனவும் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அக்குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக திணைக்களத்தினால் வருமானம் சேமிக்கப்படடிருக்கவில்லை. 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான 5 ஆண்டுகள் காலத்தின் போது ரூபா 24,865,439 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 4,973,088 சேமிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சேமிக்கப்பட்டிருக்கவில்லை. | இறுதி விருப்பு பத்திரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஐ) | தனிப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு பிரிவின் மூலம் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற 20 நம்பிக்கைப் பொறுப்புக்கள் தொடர்பாக 2019 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மொத்த சொத்துக்கள் முறையே ரூபா 17,402,203 மற்றும் ரூபா 16,655,856 தொகைகளும் முதலீட்டு வருமானம் ரூபா 938,729 மற்றும் ரூபா 1,096,900 | குறிக்கோள்களை நிறைவேற்றுவது சம்பந்தமாக நம்பிக்கைப் பொறுப்புச் சபைக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்துதல் வேண்டும். | நம்பிக்கைப் பொறுப்புச் சபை செயற்பாடற்று இருத்தல், நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் வேண்டுதல் சமர்ப்பிக்கப்படாமை நலனாளிகளை தேடிக் கண்டுபிடிப்பதில் சிக்கல் முதலிய விடயங்களின் காரணமாக குறிக்கோள்களை நிறைவேற்ற முடியாதிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | தொகைகளுமாக காட்டப்பட்டிருந்தும் அந்த நம்பிக்கைப் பொறுப்புக்களின் குறிக்கோள்கள் நிறைவேற்றப்படாது செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது. | | |
| (ஓ) | திறக்கப்படாத 254 இறுதி விருப்பு பத்திரங்களை திறப்பது சம்பந்தமான சட்ட நடவடிக்கைகளுக்காக ரூபா 2,629,250 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக டீ.எஸ்.டபிள்யூ.சமரக்கோன் மரணக் கொடையின் நிதிகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. அந்த மரணக் கொடை தொடர்பாக நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் மரணக் கொடைதாரரினால் தனது இறுதி விருப்பு பத்திரத்தில் உறுதியாக குறிப்பிடப்பட்டிருந்ததனால் இச்செலவுகளை மேற்கொள்ளல் குறிக்கோள்களுக்கு முரணானது என்பது அவதானிக்கப்பட்டது. | மரணக் கொடை தாரரினால் இறுதி விருப்பு பத்திரத்தில் உறுதியாக குறிப்பிடப்பட்டிருந்த குறிக்கோள்களை நிறைவேற்று வதற்காக மாத்திரம் மரணக் கொடை ஆதனத்தை பயன்படுத்துதல் வேண்டும். | நீதிமன்ற செயற்பாடுகளின் இறுதியில் அந்த இறுதி விருப்பு பத்திரத்தில் உள்ள ஆதனங்களிலிருந்து மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் விருப்பின் பிரகாரம் இந்த மரணக் கொடையிலிருந்து செலுத்தப்பட்டது. |
| (ஔ) | 1973 இன் 28 ஆம் இலக்க வரையறுத்த ஐக்கிய செய்திப் பத்திரிகைக் கம்பனிகள் (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டத்தின் மூலம் லேக் ஹவுஸ் நிறுவனத்தை அரசாங்கம் பொறுப்பேற்கும் போது அரசாங்கத்திற்கான பங்குகளை வைத்திருப்பதற்காக பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் பெயரிடப்பட்டிருந்தார். அதற்கிணங்க அரசாங்கத்திற்காக பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு | அனைத்து முதலீடுகள் மற்றும் அதன் அடிப்படையில் கிடைக்கின்ற பங்கிலாபங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும். | வருடாந்தம் கிடைக்கின்ற பங்கிலாபங்கள் அப்பங்கிலாபம் கிடைக்கின்ற மாதத்திலேயே கணக்கு பொழிப்புக்களின் மூலம் பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | வரையறுத்த ஐக்கிய செய்திப் பத்திரிகைக் கம்பனியின் 3,050,379 சாதாரண பங்குகளின் அதாவது 87.5 சதவீதமான உரிமையாண்மை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தும் அது சம்பந்தமாக அதன் அடிப்படையில் உழைக்கப்படுகின்ற பங்கிலாபம் சம்பந்தமாக திணைக்களத்தின் நம்பிக்கைப் பொறுப்பு / மரணக் கொடை ஆதன கணக்குகளில் எதுவித வெளிப்படுத்தலும் செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஔ) | 6 நம்பிக்கைப் பொறுப்பு / மரணக் கொடை சம்பந்தமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கி மீதியானது ரூபா 16,621,711 கூட்டு மொத்தமான வரவு மீதி உருவாகும் வகையில் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் 2 நம்பிக்கைப் பொறுப்பு / மரணக் கொடை தொடர்பாக ரூபா 1,341,833 கூட்டு மொத்தமான வரவு மீதிகளைத் தீர்த்து வைப்பதற்காக அந்த மரணக் கொடைக்காக முதலீடு எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு நம்பிக்கைப் பொறுப்பு / மரணக் கொடைக்காக கிடைக்கின்ற வருமான எல்லைக்குள் செலவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | பிரமுக வங்கியில் மேற்கொண்ட முதலீட்டிற்காக உரியவாறு வட்டி கிடைக்காமையும் நலன்பெறுநர்களுக்கு கொடுப்பனவு செய்ய வேண்டி ஏற்பட்டமையும் பணத்தை முகாமைத்துவம் செய்யும் போது செலவு செய்ய வேண்டி ஏற்பட்டமையும் காரணமாக இந்த வரவு மீதி உருவாகியுள்ளது. முதலீட்டு வருமானங்கள் மற்றும் வீட்டு வாடகை வருமானங்களின் மூலம் அந்த மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (க) | பல்வேறு கட்டளைச் சட்டங்களினூடாக திணைக்களத்திற்கு விசேடத்துவமான கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க திணைக்களத்திடமிருந்து பல்வேறு தரப்பினர்களுக்கு பல்வேறு சேவைகள் | இணையதள பக்கத்தினை மூன்று மொழிகளிலும் நாளதுவரையாக்கி பேணுதல், இறுதி விருப்பு பத்திரத்தினை எழுதுவது சம்பந்தமான | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |

வழங்கப்படுகின்றன. எனினும், திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்ற செயற்பாடுகள் தொடர்பாக மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக முறையான வேலைத்திட்டம் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. திணைக்களத்தின் பெயரில் இணையதளப் பக்கம் தயாரிக்கப்பட்டிருந்தும் அதனை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பயன்படுத்துவதற்கான வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் திணைக்களத்தின் பின்னணி, பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் கடமைகள், ஒவ்வொரு பிரிவினதும் கடமைகள் என்பன மாத்திரம் அதில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் பொது மக்களுக்கு விபரமான தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் மற்றும் தமது ஆதனங்களின் நம்பிக்கைப் பொறுப்பாளராக பொது நம்பிக்கைப் பொறுப்பாளரை நியமிப்பதற்கான அக்கறை ஏற்படும் வகையிலான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.

ஆலோசனைகள் மற்றும் மாதிரிப் படிவங்கள் புலமைப் பரிசில்கள் மற்றும் மருத்துவ உதவி முதலிய உதவிகள் வேண்டுகின்ற பத்திரங்கள் என்பவற்றை இணையதள பக்கத்தினூடாக பெற்றுக் கொள்ளும் வசதியை வழங்குதல் மற்றும் பொது மக்களின் கருத்துரைகள், பிரேரணைகள் மற்றும் முறைப்பாடுகளைப் பொறுப்பேற்கும் நடைமுறையை அறிமுகப்படுத்துதல்

**4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்ளுதல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ‘‘நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம் அனைத்து அரசாங்க நிறுவனங்களினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் தமது நோக்கெல்லையின் கீழ் கொண்டு வரப்படுகின்ற செயற்பாடுகள் சம்பந்தமாக தொடர்புபட்ட அபிவிருத்தி குறிக்கோள்கள், இலக்குகள், மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டிய மைய நிலைகளும் இலக்குகளின் அடிப்படையில் அடைந்து கொள்ளலை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிறைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் தேவைப்பாட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திணைக்களத்தின் நிருவாகப் பிரிவின் நிருவாக உத்தியோகத்தர் பதவி மற்றும் பிரதான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அதில் சிரேஷ்ட உத்தியோகத்தர் களும் சேவையாற்றுவதில்லை. எனவே நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் செயற்படுவதற்கு முடியாதுள்ளது. 2021 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நிலைபேறான அபிவிருத்தியை அறிமுகப்படுத்துதல் மற்றும் அளவீடு செய்யும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

**5. மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் அங்கீகரித்த, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணி முறையே 87, 69 மற்றும் 18 ஆகும். நிருவாக நடவடிக்கை சம்பந்தமாக சிரேஷ்ட மட்டத்திலான ஒரு பதவி இல்லாதிருந்ததுடன் நிருவாக உத்தியோகத்தர் பதவியானது 2015 யூலை மாதத்திலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டது. மேலும், 2018 மே 21 ஆந் திகதி சட்ட உத்தியோகத்தர் பதவி அங்கீகரிக்கப்பட்டிருந்தும் அதற்காக ஒரு உத்தியோகத்தர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அத்தியாவசியமான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |